**Pastoral letter No/GR/ 15/ 2014**

## ஆயர் திருமுகம்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

**நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.**

2014 ஆம் ஆண்டு கத்தோலிக்கத் திருச்சபையின் சார்பில் குடும்ப வாழ்க்கை அனுபவத்தை ஆயர்கள் பிரதிநிதிகளுடைய கூட்டமான உலக ஆயர்மன்றம் ஆய்வு செய்ய வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் ஏற்பாடுகள் செய்துள்ளார். அதன் காரணமாக இந்த ஆண்டைக் **குடும்ப ஆண்டாக** திருச்சபை அறிவித்துள்ளது

மனித வாழ்வின் அடித்தளங்கள் மற்றும் மனிதர்களின் தொடக்க உருவாக்கம் பரவலாகவும் பெரும்பான்மையாகவும் குடும்பத்தில் ஏற்படுகிறது. மனிதர்களின் நெருக்கமான உறவு, உயிரின் தோற்றம் வளர்ச்சி போன்றவை குடும்பத்திலே நிகழ்கின்றன.

உலகில் எல்லா அறங்களும், தர்மம் மற்றும் குணநலன்களும் ஒன்று சேர காணுமிடம் குடும்பமே. தாயினிடத்தில் தியாகம், அன்பு, கீம்ப்படிதல் போன்ற குணநலன்களையும் தந்தையிடம் வழிநடத்தல், உழைப்பு, விருந்தோம்பல் பண்புகளையும் குழந்தைகளிடத்தில் பாசம், பணிவு, கீழ்படிதல் எனும் உள்ள உணர்வுகளையும் காணலாம். ஆகவே குடும்பம் என்பது அனைத்துத் தர்மங்களுக்கும் ஆதாரம் என்று கூறலாம். குடும்பம் மனிதப் பண்பை வளமுறச் செய்கின்ற ஒரு பள்ளி எனலாம். ஆனால், குடும்பத்தின் வாழ்வும் அதன் பணியும் முழுமலர்ச்சி பெற வேண்டுமானால் அங்குப் பாச உணர்வோடு கூடிய மனஒன்றிப்பும், மணமக்களின் கூட்டு ஆலோசனையும், குழந்தைகளைப் பயிற்றுவித்தலில் பெற்றோரின் கருத்தான ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றன. இவ்வாறு குடும்பம்தான் சுமுதாயத்தின் அடித்தளமாக இருக்கிறது (இஉதி: எண் 52).

குடும்பம் என்பது உலகப் படைப்பிலே இறைவனால் உருவாக்கப்பட்ட, இறை சாயலான அன்பினால் இயங்கும்படி அமைக்கப்பட்ட ஓர் அமைப்பு முறையாகும். எல்லாம் வல்ல இறைவனின் படைப்பாற்றலிலே பங்குகொண்டு, மீட்பின் வரலாற்றை இயக்கிவைப்பதில் இன்றியமையாத கூறாக உயர்ந்து நிற்பதும் குடும்பமே. அன்பும், அறனும், அருளும் தோன்றி மலர்ந்து மணம் பரப்பி, மகிழ வைப்பதும் குடும்பமேதான்.

குடும்பம் என்பது ஒரு பல்கலைக்கழகம். அங்குதான் மனிதன் உருவாகிறான், உருவாக்கப்படுகிறான். அன்பையும், அறிவையும் தொடங்கிவைப்பதும், பயிற்றுவித்து சமூகப் பண்புடையதாக்குவதும் குடும்பத்தில்தான் நிகழுகிறது. நல்ல குடும்பம் நல்ல உலகம். குடும்பத்தை உருவாக்கு, குவலயம் உருவாகும். குடும்பத்தை உருமாற்று, குவலயம் உருமாறும் என்பதற்கு ஏற்ப வீட்டிற்கும், திருச்சபைக்கும், நாட்டிற்கும், உலகிற்கும் அடிப்படை ஆதாரமாக இருப்பதும் குடும்பம்தான்.

ஆனால் இன்று நாம் அப்படிக் கூறிவிட முடியுமா? பல குடும்பங்களில், தம்பதியினர் ஒருவரையொருவர் அன்பு செய்ய முடியாமல், வெளிப்பார்வைக்கு அன்பு செய்வதுபோன்று நடித்துக் கொண்டிருக்கின்றனர், அல்லது வேறுவழியின்றி 'அட்ஜஸ்ட்'

செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அறிவியலின் அசுரவேகம், தனித்துறைப்பாண்டித்துவம், உறவுத் தொலைவு ஆகிய காரணங்களால் இன்று குடும்பங்களும், குடும்ப வாழ்வும் சுயமதிப்புக்கும் சிக்கலுக்கும் உள்ளாகி சீரழிந்து காணப்படுகிறது.

உறவுப்பிளவுகளும், கலாச்சாரச் சீரழிவுகளும், வரம்பற்ற மனித உரிமைக்கோட்பாடுகளும், குடும்பங்கள் சிதைவுறக் காரணமாக அமைந்துள்ளன. பெண்ணடிமைத்தனமும், ஆணாதிக்கமும், சாதிய ஏற்றத்தாழ்வுகளும், அநியாய வரதட்சணை நடைமுறைகளும், செல்வச் செழிப்பும் இன்று குடும்பங்களைச் சீரழித்து வருகின்றன.

கணவன், மனைவி எப்படி நடந்துக் கொள்ள வேண்டுமென்று பவுலடிகளார் 1கொரி7: 1-16 - ல் மிகத் தெளிவாக அறிவுறுத்துகின்றார். பெண் தன்னை நற்செயல்களால் அலங்கரித்துக் கொள்பவராகவும், தெய்வ பக்தியுள்ளவராகவும் இருக்க வேண்டுமெனவும், ஆண்கள் தெய்வ பயத்துடன் ஜெபிக்கின்ற பழக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டுமெனவும் விவிலியம் அறிவுரைக் கூறுகிறது. உலகம் வெகு சீக்கிரமாகவே நிறைவடையப் போகிறது என்று நம்பிய தொடக்க உணர்வானது மணத்துறவை சிறந்த நிலையாகக் கருதிய பின்னணியிலும் கணவன் மனைவி உறவு என்பது உடலையும் சக்தியையும் தானமாகத் தந்த இயேசுவின் அர்ப்பணத்தையும் அன்பையும் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும் என்று பவுல் அடியார் கனவு கண்டுள்ளார்.

முந்த முந்த இறையாட்சியையும் அதன் நீதியையும் தேட வேண்டும் (மத் 6:33). ஆபிரகாமைப் போல இறைவனை அன்பு செய்து, அவர் வார்த்தையில் நம்பிக்கை வைக்க வேண்டும். நமக்காக உயிரையே கொடுத்த இறைவன், நம் பிள்ளைகளுக்கு நல்ல வரங்களைக் கொடுக்கமாட்டாரா? என்று அவரை விசுவசிக்க வேண்டும்.

ஆபிரகாம் கடவுளுக்கு கீழ்படிந்து, மகனையே பலி கொடுக்கத் துணிந்தது விசுவாசத்தினால்தானே! ஈசாக் தன் தந்தை ஆபிரகாமிடம், ***"அப்பா, தகன பலிக்கு நெருப்பு இருக்கிறது. விறகு கட்டைகளும் இருக்கிறது, ஆட்டுக்குட்டி எங்கே? "*** என்றான். (தொநூ 22:7) என்று விவிலியத்தில் படிக்கிறோம்! "அதை இறைவன் பார்த்துக் கொள்வார்!" என்றார் ஆபிரகாம். அதன் பிறகு நடந்தது நமக்குத் தெரியும். ஈசாக்கு பலியாவதை இறைவன் தடுத்தது மட்டுமல்ல, ஆபிரகாமுக்கு பலி செலுத்தும்படியாக அங்கே ஏற்கனவே தயாராக வேலியில் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஆட்டை இறைவன் பார்க்கும்படி செய்கிறார் என்று பார்க்கிறோமல்லா!

முதன்மை மனிதனான இயேசு குடும்ப சூழலில் வளர்ந்தவர். குடும்பம் அமைக்கும் ஆணும் பெண்ணும் பிரிந்து போதல் சிறந்த நிலை அல்ல என்பது இயேசுவின் கருத்து. ஆனால் தற்காலிக நாகரீகக் கலாச்சாரச் சூழலில் சுயநலமும், நுகர்வுக்கோட்பாடுகளும், குடிவெறியும், குடும்பங்களைக் குலைக்கும் கோடரிகளாக உள்ளன. இன்று வன்முறை, கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோரின் பின்னணியை ஆய்வு செய்ததில், அன்பு உறவற்ற குடும்பச் சூழலில் வாழ்ந்த, வளர்ந்த பிள்ளைப்பருவமே இதற்குக் காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே குடும்பத்தின் மாண்பும், மதிப்பும், மகத்துவமும், அதன் பிளவுபடாத் தன்மையும் பேணிக் காக்கப்பட வேண்டும். குடும்பத்திலே தம்பதியர்கள் பொறுப்புடைய பெற்றோராயிருந்தாலும் பிள்ளைகள் தெய்வபயத்துடன்

நன்மனச்சான்றுடையவர்களாக கடவுளின் திருவுளத்திற்கேற்றபடி வளர்க்கப்படுவது மிக அவசியமானதாகும்.

இதையே நமது மறைமாவட்டம் **"என் குடும்பம் திருக்குடும்பம்"** எனும் கருத்தை மையமாக வைத்து குடும்ப ஆண்டாக கொண்டாடுகிறது.

இச்சூழலில் நம் மறைமாவட்டத்தில் நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அவற்றில் முதலாவது எல்லா குடும்பங்களிலும் மாலை 8 மணிக்கு குடும்ப செபமாலை சொல்வதாகும். இதைத் தொடர்ந்து மறைமாவட்ட அளவிலும், பங்கு அளவிலும் நடைபெறும் குடும்ப மேம்பாட்டு நிகழ்வுகளுக்கு, உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் கொடுத்து, நம் குடும்பம் திருக்குடும்பமாக மாற அயராது உழைப்போம்.

குடும்ப ஆண்டிற்கான நிகழ்வுகள் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளன

**மறைமாவட்ட அளவில்**

1. பிப்ரவரி 16 ஆம் தேதி ஞாயிறன்று ஆயரின் சுற்றுமடல் வாசித்தல்.
2. பங்கு தளத்தில் பிப்ரவரி 23, ஞாயிறன்று குடும்ப ஆண்டு தொடங்கப்படுகிறது.
   அ. வாசலில் ஒட்டி வைக்க ஸ்டிக்கர், ஜெபமாலை புத்தகம், ஆர்ப்பரிப்பு மன்றாட்டு (காறோசூசா) ஆகியவை வழங்கப்படுகிறது.
   ஆ. மாலை 8 மணிக்கு அனைத்து குடும்பங்களிலும் குடும்ப ஜெபமாலை சொல்லுதல்.
3. மறைமாவட்ட அளவில் நடக்கின்ற அனைத்து போட்டிகளும் குடும்ப ஆண்டை மையப்படுத்தியதாக அமைய வேண்டும்.
4. திருமண வெள்ளிவிழா, பொன்விழா, அதிக பிள்ளைகளை உடையவர்கள், இறையழைத்தல் பெற்ற குடும்பங்களைப் பாராட்டுதல்.
5. குடும்பங்களுக்காக மூன்று நாள் சிறப்பு தியானம் நடத்துதல்.
6. குடும்ப வாழ்வை சித்தரிக்கும் வீதி நாடகம் ஒவ்வோரு பங்குகளிலும் நடத்துதல்.
7. திருமணமாகாத ஏழை பெண்களுக்கான திருமண நிதி. ஆலயத்தில் திருமணங்கள் நடக்கும் போது எடுக்கப்படும் காணிக்கைகளை இதற்காக ஒதுக்கி வைத்தல்.
8. இடையிடையே குடும்ப வாழ்வைக் குறித்த துண்டு பிரசுரங்களை வெளியிட்டு பங்கு மக்களுக்குக் கொடுத்தல்.
9. குடும்ப வாழ்வோடு தொடர்புடைய பாடல்கள், திருவிவிலியம் ஒலிவடிவில், ஆகியவை மக்களின் பயன்பாட்டிற்காக mp3 ஆக கொடுத்தல்.
10. புனித நாட்டிற்கு திருப்பயணம்.

**மறைவட்ட அளவில்**

1. காணொளி காட்சிகளுடன் ஒரு நாள் கருத்தரங்கு
2. மாலை நேர தியானங்கள்.
3. புனிதப்பயணம்.

**பங்களவில்**

1. பிதுறு வேதி (தந்தையர்களுக்காக) ஆரம்பித்தல்.
2. உறவியம், மாதறுஜோதிஸ் இல்லாத இடங்களில் உடனடியாக ஆரம்பித்தல்.
3. குடும்ப வாழ்வை சித்தரிக்கும் கண்காட்சி.
4. குடும்ப விழா (குடும்ப சங்கமம்) – திருப்பலி, போட்டிகள், அன்பின் விருந்து போன்றவை.

5. ஒரு நாள் ஒரு குடும்பம்.
   அ. திருப்பலி குறிப்பிட் ஒரு குடும்பத்திற்காக ஒப்புக்கொடுத்தல்.
   ஆ. மாலையில் பங்கு தந்தையும் குடும்ப செபத்தில் பங்கேற்கிறார்.
   இ. குடும்ப உறுப்பினர்களுடன் பேசுதல், விசுவாச வாழ்வு குறித்த விவாதம்.
   ஈ. குடும்பத்தோடிணைந்து எளிய உணவு.
6. ஒரு கத்தோலிக்க வெளியீடு (சீனாய்) குடும்பங்களில் அவசியம்.
7. ஓராண்டின் நிறைவில் புதிதாக ஒரு குடும்பத்தையாவது இணைத்தல்.
8. ஒவ்வொரு பக்த இயக்கஙளும், குடும்ப ஆண்டை மையப்படுத்தி ஒரு குறிப்பிட்ட செயலை முன்னெடுத்தல்.
9. திருவிவிலியம், திருக்குடும்பப் படம், ஜெபமாலை எல்லா வீடுகளிலும் உறுதி செய்தல்.

உங்களுக்காக ஜெபிப்பதோடு, இக்குடும்ப ஆண்டில் கடவுளின் ஆசீயையும் நான் வேண்டுகிறேன்.

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன்**
தக்கலை மறைமாவட்ட ஆயர்